# முடியாதது முடிந்தது!

வாசிக்க: யோவான் 19:30-42

***"முடிந்தது!" (யோ 19:30)***

மாபெரிதான இரட்சிப்பின் வேலை முடிந்தது; பரம தந்தையின் சித்தம் ஒன்று விடாமல் நிறைவேறி முடிந்தது. பழுதொன்றுமின்றி தம் உடலையும், குற்றமொன்று மின்றி தமது இரத்தத்தையும் இயேசு கொடுத்தபோது பரிசுத்தமும் நீதியுமுள்ள இறைவனின் நிபந்தனைகள் அத்தனையும் நிறைவேற்றப்பட்டன. இயேசுவின் பலி பூரணமானது. அதோடு நாம் ஒன்றையும் கூட்டமுடியாது, தேவையுமில்லை. எனவே தான் "ஒழிந்தது" என்று எண்ணிய எத்தர் முன்னிலையில் "முடிந்தது" என்று வெற்றி முழக்கமிட்டார் எம்பெருமான்.

சிலுவையில் முடிக்கப்பட்ட வேலையினால் இரட்சிப்பு இன்று நமக்கு இலவசம். ஈவைச் சம்பாதிக்க முடியாது. கடவுளைப் பொறுத்தவரை இரட்சிப்பு முழுக்க முழுக்க கிருபையினாலானது; நம்மைப் பொறுத்தவரை அது முழுக்க முழுக்க விசுவாசத் தினாலானது. நல்ல "செயல்களினால்" அல்ல, நல்ல "செயல்களுக்காய்" இரட்சிக்கப்பட்டோம் (எபே 2:8-10).

ஈவுகளிலெல்லாம் பெரியதான இரட்சிப்பை வெறுமனே விசுவாசத்தால் எவ்விதம் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதே மனித அறிவைக் குழப்புகிறது. ஏதாவ தொன்றைச் "செய்து" அதைச் சம்பாதிக்கவேண்டுமென்றே மனிதனின் பெருமை விரும்புகிறது. கடவுளோ "செய்தாயிற்று" என்கிறார்.

கிறிஸ்துவை விசுவாசித்ததோடு விருத்தசேதனமும் பண்ணிக்கொள்ளவேண்டு மென்று யூதேயாவிலுள்ள போதகர் சிலர் விசுவாசிகளை வற்புறுத்தியபோது, அவர்களுக்கும் பவுல், பர்னபா என்பவர்களுக்கும் "மிகுந்த வாக்குவாதமும் தர்க் கமும்" உண்டானது (அப் 15:1,2). சிலுவையோடு எதையும் கூட்ட எவரெழுந்தாலும் சிறுத்தைபோல் பாய்ந்தனர் அப்போஸ்தலர்.

கலாத்தியாவில் சிலர் கிறிஸ்துவின் கிருபையோடு பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தைச் சேர்க்க விரும்பினர். "நீங்கள் கிருபையிலிருந்து விழுந்தீர்கள்" என்றார் பவுல் (கலா 5:4). கிறிஸ்து அவர்களைவிட்டு விலகிவிட்டார் என்றே சொல்லிவிட்டார் (4:19). ஆம், சட்டமும் கிருபையும் சேர்ந்திருக்கமுடியாது. இஸ்ம வேலும் ஈசாக்கும் ஒன்றித்திருப்பது எங்ஙனம்? "இதையும் செய்துகொள்வது பாதுகாப்பு" என்று சிலர் சொல்வது அழகாய்த் தோன்றுகிறது. ஆனால் "முடிந்தது" என்ற சிலுவைக் கூற்றுக்குமுன் இது அபத்தமானது.

பவுலின் நிருபங்களைத் திரும்பத்திரும்ப வாசித்தால் கிருபையினாலுண்டாகும் இரட்சிப்பைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளலாம். நாம் இருப்பதும், இருக்கப் போவதும் தேவ கிருபையினாலேயே. தங்களால் முடிந்த அத்தனையும் செய்து தோல்வியடைந்தவர்க்குரியதே கிறிஸ்துவின் நற்செய்தி!

*கிருபை! எம்மைச் சூழ்ந்துகொள்ளும் — தம் கிருபை*
*கர்த்தரில் மகிழ்வோம், களிகூர்ந்திடுவோம்,*
*கண்டடைந்தோம் கிருபை! — சகோதரி சாராள் நவரோஜி*